## சென்னை மெட்ரோ ரெயில் திட்டம் - கட்டம் 2 – வழித்தடம் 4

# திட்ட நிறைவேற்றுச்சுருக்கம்

### அ. திட்ட விளக்கம்

சென்னை மாநகரமானது வங்காள விரிகுடாவின் சோழ மண்டலக் கடற்கரையில் அமைந்துள்ளது, இது நான்கு பரந்த பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது: வடக்கு, மத்திய, தெற்கு மற்றும் மேற்கு. தெற்கில் பழைய மஹாபலிபுரம் சாலை(OMR) மற்றும் தெற்கு பெருவழிச்ச சாலை (GST ரோடு) ஆகியவற்றின் நெடுகிலும், மேற்கில் அம்பத்தூர், கோயம்பேடு மற்றும் ஸ்ரீபெரும்புதூர் ஆகிவற்றினை நோக்கி சென்னை மாநகரம் வேகமாக விரிவடைந்து வருகிறது. தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த இயக்க சேவைகள்( IT / ITES ) போன்ற துறைகளில் ஏற்பட்ட பெரிய அளவிலான நகரமயமாக்கல் மற்றும் அதிவேக வாகனத் தொகை வளர்ச்சியுடன் கூடிய தொழில்மயமாக்கல் ஆகியவை சென்னையின் நகர்ப்புற போக்குவரத்து அமைப்பிற்கு கடுமையான அழுத்தத்தை ஏற்படுத்தியுள்ளன.தமிழக அரசின் சமீபத்திய வாகன புள்ளிவிவரங்களின்படி நகரத்தில் சுமார் 48 லட்சம் வாகனங்கள் உள்ளன.

நகர அளவிலான போக்குவரத்து தேவைகள் பெரும்பாலும் மாநகர போக்குவரத்து கழக(MTC ) பேருந்துகள், இடைநிலை போக்குவரத்து அமைப்புகளான(IPT) முக்கியச் சாலைவழிகளில் பயன்படுத்தப்படும் பகிர்ந்த சேவைகள் மற்றும் MRTS எனபடும் பெருந்திரள் விரைவு ரயில் அமைப்பு ஆகியவற்றால் பூர்த்தி செய்யப்படுகின்றன. பொது போக்குவரத்து வசதிகளின் போதாமையால் தனி நபர் மற்றும் தனியார் போக்குவரத்துக்கு முறைகளின் பயன்பாடு தடையின்றி அதிகரித்து வருகிறது.அதோடு தற்போது 45 கி.மீ தூரத்தை உள்ளடக்கிய சென்னை மெட்ரோ ரெயில் திட்டத்தின் முதல் கட்டம் முழு பயன்பாட்டில் உள்ளது. இது உயர்த்தப்பட்ட மற்றும் பாதாள மார்க்கங்கள் அடங்கிய இரண்டு வழித்தடங்களை கொண்டுள்ளது. அவை முறையே வண்ணாரப்பேட்டை - விமான நிலையம் ஆகியவற்றை இணைக்கும் 23 கி.மீ தூரம் கொண்ட வழித்தடம் - 1 மற்றும் சென்னை மத்திய ரெயில் நிலையம் - பரங்கிமலை ஆகிவற்றை இணைக்கும் 22 கி.மீ தூரம் கொண்ட வழித்தடம் - 2.

தற்போதுள்ள சாலை அடிப்படையிலான பேருந்து போக்குவரத்து மற்றும் பயன்பாட்டில் உள்ள சென்னை மெட்ரோ ரெயில் திட்டத்தின் முதல் கட்டத்துடன் கூடுதலாக ஒரு பயனுள்ள, திறனுள்ள, பெருந்திரள் போக்குவரது சேவையினை அளிக்கும் கண்ணோட்டத்தில், தமிழக அரசு மெட்ரோ ரயில் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தினை செயல்படுத்த முடிவு செயதுள்ளது. வழித்தடம் 4 இத்திட்டத்தில் இரண்டாம் கட்டத்தின் ஒரு பகுதியாகும். 26 .085 கி.மீ தூரம் கொண்ட இந்த வழித்தடம், கலங்கரைவிளக்கம் - பூந்தமல்லி பைபாஸ் பகுதிகளை இணைக்கும். இதில் 30 ரயில் நிலையங்களும் தொடருந்து பராமரிப்பு கூடம் ஒன்றும் உள்ளடங்கும்.

## ஆ. நிலம் கையகப்படுத்துதல் மற்றும் மீள்குடியேற்றம்

அரசால் முன்மொழியப்பட்டுள்ள இத்திட்டத்தின் பகுதியாக, வழித்தடம்க்கு 10.74 ஹெக்டேர் பரப்பளவு உள்ள நிலமும், பராமரிப்பு கூடத்திற்காக 17.40 ஹெக்டேர் பரப்பளவு உள்ள நிலமும் கையகப்படுத்துவது அடங்கும். வழித்தடம்க்கு தேவையான 10.74 ஹெக்டேர் நிலப்பரப்பளவில் 5.70 ஹெக்டேர் பரப்பளவு நிலம் தனியாருக்கு சொந்தமாகவும் 5.04 ஹெக்டேர் பரப்பளவு நிலம் அரசுக்கு சொந்தமானதாகவும் உள்ளது. கூடத்திற்கான 17.40 ஹெக்டேர் பரப்பளவு உள்ள நிலத்தினை அரசு மூலம் கையகப்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

முன்மொழியப்பட்டுள்ள திட்டமானது 429 கட்டமைப்புகளில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும். அவற்றில் 29 குடியிருப்பு கட்டமைப்புகள், 331 வணிக கட்டமைப்புகள், 39 குடியிருப்புடன் கூடிய வணிக கட்டமைப்புகள் மற்றும் மீதமுள்ள 30 இலக்கமானது கோயில்கள், மருத்துவமனைகள், பள்ளிகள், சமூக மையங்கள் போன்ற பிற கட்டமைப்புகள் ஆகும் . சீரமைப்பு வரைபடத்தின் அடிப்படையில், வழித்தடம் - 4 இல் உள்ள மொத்த 429 கட்டமைப்புகளில், சுமார் 85 கட்டமைப்புகள் முழுமையாக பாதிக்கப்படும், மீதமுள்ள 344 கட்டமைப்புகள் ஓரளவு பாதிக்கப்படும்.

முன்மொழியப்பட்டுள்ள வழித்தடத்தின் கட்டுமானச் செயலால், திட்டஞ்சார்ந்த பாதிக்கப்பட்ட நபர்களாக 4755 பேர் கொண்ட 1031 குடும்பங்களில் பகுதியாகவோ அல்லது முழுமையானதாகவோ பாதிப்பு ஏற்படும் . மொத்த 1031 குடும்பங்களில் குடியிருப்புச் சார்ந்த பாதிப்புகள் உடையனவாக 297 குடும்பங்களும், பொருளாதார ரீதியாக பாதிப்புகள் உடையனவாக 733 குடும்பங்களும் மீதமான 1 குடும்பம் குடியிருப்பு மற்றும் பொருளாதார ரீதியாக இருமடங்கிலும் பாதிப்புக்குள்ளாகும் வகையில் உள்ளது.

சரியான நேர முனைப்பில் நிலம் கையகப்படுத்துதலை துரிதப்படுத்த சென்னை மெட்ரோ இரயில் நிறுவனித்திற்குட்பட்டு, நிலம் கையகப்படுத்தல் மறுவாழ்வு மற்றும் மீள்குடியேற்ற பிரிவு (LARRU) உருவாக்கப்பட்டு உள்ளது. இந்த பிரிவிற்கு மாவட்ட வருவாய் அதிகாரி தலைமையின் கீழ் மூன்று மாவட்ட துணை ஆட்சியர் மற்றும் வட்டாச்சியர் செயல்படுவர்.

## இ. திட்டத்தினால் பாதிப்புக்கு உள்ளானவர்களுடன்(PAPs) கலந்தாலோசனை

கணக்கெடுப்பு மற்றும் சமூக-பொருளாதாரகள ஆய்வின் பொழுது, வழித்தடம்- 4 இல் திட்டமிடப்பட்டுள்ள ரயில் நிலையங்கள் அமையும் பகுதிகளில், பாதிக்கப்பட வாய்ப்புள்ள நபர்கள் மற்றும் பொது மக்களுடன் ஆலோசனை கூட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. இவற்றில் நிலம் கையகப்படுத்துதலினால் வரக்கூடிய பிரச்சினைகள், இழப்பீடு, பாதிக்கப்படுவோரின் வருவாயை மீட்டெடுத்தல், வேலைவாய்ப்பினை உருவாக்குதல், தகவலோட்டம் மற்றும் குறைகள் தீர்த்தல் ஆகிய கூறுகள், சம்மந்தப்பட்ட சமூக குழுக்களுடன் கலந்தாலோசிக்கப்பட்டன.

## உ. கொள்கை மற்றும் சட்டரீதியான கட்டமைப்பு

திட்டத்தின் பகுதியாக செயல்படுத்தப்படும் சட்டங்களான இந்திய அரசின் நியாயமான இழப்பீட்டு உரிமை மற்றும் வெளிப்படையான நிலம் கையகப்படுத்துதல், புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்றச் சட்டம்(Right to Fair Compensation and Transparency in Land Acquisition, Rehabilitation and Resettlement Act, 2013 ) அல்லது நிலம் கையகப்படுத்துதல் சட்டம், 2013 மற்றும் தமிழக அரசின் தொழில்துறை நோக்கங்களுக்காக நிலம் கையகப்படுத்துதல் சட்டம் 1997 ஆகிவற்றிற்கு ஏதுவாகவும் திட்டத்தில் பங்கு பெறும் பலதரப்பட்ட சர்வதேச வளர்ச்சி வங்கிளின்(MDBs ) சமூக பாதுகாப்புக் கொள்கைகளுக்கு தீர்வு காணவும் மீள்குடியேற்ற கொள்கை கட்டமைப்பு ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. இது திட்டத்தினை செயல்படுத்தும் நிறுவனமான சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம்(CMRL) மற்றும் ஆசிய வளர்ச்சி வங்கி(ADB ), ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கி(AIIB ) மற்றும் புதிய வளர்ச்சி வங்கி(NDB ) ஆகிய பலதரப்பட்ட சர்வதேச வளர்ச்சி வங்கிகளின்(MDBs ) இடையே ஒப்புக்கொண்ட அணுகுமுறையை எடுத்துரைக்கும். நிலம் மற்றும் அதிலுள்ள சொத்துக்கள் அல்லது கட்டமைப்புகள், வருவாய் இழப்பு இவற்றிற்கான இழப்பீடு; மீள்குடியேற்றத்திற்கான உதவிகள் ஆகியவை அடங்கிய உரிமை வழங்கல் வார்ப்பு(ENTITLEMENT MATRIX) தயாரிக்கப்பட்டுள்ளது. இது சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தின் முதல் கட்டத்தின் பொழுது வழங்கப்பட்ட இழப்பீடு முறையினை விட மேம்பட்ட முறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் பகுதியாக மீள்குடியேற்ற வரைவை செயல்படுத்துவதற்கான அரசின் நிதி வரவு செலவு பட்டியலில்(பட்ஜெட்) ரூ. ------------- கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

## ஊ. இழப்பீடு மற்றும் உரிமை வழங்கல்

தமிழக அரசின் தொழில்துறை நோக்கங்களுக்காக நிலம் கையகப்படுத்துதல் சட்டம் 1997 (தமிழகச் சட்டம் எண் 10 , 1999 ) என்பதற்கு இணங்க இத்திட்டத்திற்கான நிலத்தினை கையகப்படுத்த முன்மொழியப்பட்டு, சென்னை மெட்ரோ திட்டத்தின் முதல் கட்டத்தின் போது செயல்படுத்திய அதே முறையில், நியாயமான இழப்பீட்டு உரிமை மற்றும் வெளிப்படையான நிலம் கையகப்படுத்துதல், புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்றச் சட்டத்திற்கு (Right to Fair Compensation and Transparency in Land Acquisition, Rehabilitation and Resettlement Act, 2013 ) உட்பட்டு நிலங்கள் கையகப்படுத்தப்படும். நிலத்திற்கான இழப்பீடு மற்றும் மீள்குடியேற்றதிற்கான உதவி ஆகியன சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின்(CMRL) கொள்கைகளுக்கு ஏற்ப வழங்கப்படும். பாதிக்கப்பட்ட நபர் ஒரு வேலை இதற்கு இணங்காவிடில், அவருக்கு நிலம் கையகப்படுத்துதல், புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்றச் சட்டத்திற்கு (Right to Fair Compensation and Transparency in Land Acquisition, Rehabilitation and Resettlement Act, 2013 ) ஏற்ப இழப்பீடும் மீள்குடியேற்ற உதவியும் வழங்கப்படும்.

பாதிப்படக்கூடிய வீடுகள், கட்டிடங்கள் மற்றும் பிற அசையா சொத்துக்களின் மாற்று மதிப்பு (REPLACEMENT VALUE),தேய்மானத்தினை(DEPRECIATION) கணக்கில் கொள்ளாது, பொதுப்பணித்துறையின்(PWD) சமீபத்திய தரநிலை விகிதங்களின் (STANDARD SCHEDULE OF RATES) அடிப்படையில் தீர்மானிக்கப்படும். பட்டா அல்லது

தலைப்புரிமை உள்ள உரிமையாளர்களுக்கு தகுதிக்கான கடைசித் தேதி என்பது அந்தந்த சொத்துக்களை கையகப்படுத்துவதற்கான செய்தித்தாள் அறிவிப்பு வெளியான தேதி ஆகும். இத்தகைய செய்தித்தாள் அறிவிப்புகள் 3 நவம்பர் 2018 முதல் தொடங்கப்பட்டு இன்று வரை தொடர்கின்றன. பட்டா அல்லது தலைப்புரிமை இல்லாதவர்களுக்கு சமூக-பொருளாதார கள ஆய்வின் தொடக்க தேதி, அதாவது, நவம்பர் 1, 2019 என்பது தொகுதிக்கான கடைசி தேதி ஆகும்.

**எ. நிறுவனஞ் சார்ந்த ஏற்பாடுகள்**

தமிழக அரசு (GoTN) மற்றும் இந்திய அரசு (GoI) ஆகியவை பணியினை நிறைவேற்றும் நிறுவனங்களாக இருக்கும். முன்மொழியப்பட்ட வழித்தடம் 4.இன் பனி கட்டுமான மேற்பார்வை மற்றும் மீள்குடியேற்ற திட்டத்தினை(RESETTLEMENT PLAN ) செயல்படுத்தவும், பொது ஆலோசகர் மற்றும் அரசு சார்பற்ற அமைப்பின் துணை கொண்டு சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம்(CMRL ) பொறுப்பேற்கும். இது தவிர சமூக பாதுகாப்பு குறித்த முன்னேற்ற அறிக்கைகளை(PROGRESS REPORTS ) சர்வதேச வளர்ச்சி வங்கிகளுக்கு(MDBs )அனுப்பும் பொறுப்பினையும் ஏற்கும்.திட்டத்தின் கீழ் சுற்றுச்சூழல் மற்றும் சமூக பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்த மூன்றாம் கண் கண்காணிப்பினை வெளிநிபுணர் ஒருவர் மேற்கொள்வார்.

**ஏ. மறை வெளியீடு**

அங்கீகரிக்கப்பட்ட மீள்குடியேற்றக் கொள்கை கட்டமைப்புடன் வரைவு மீள்குடியேற்ற வார்ப்பு வெளியிடப்படும். மேலும் திட்ட வடிவமைப்பை முடித்த பின்னர், மீள்குடியேற்ற வார்ப்பு திருத்தப்பட்டு, அங்கீகரிக்கப்பட்டு அறிவிக்கப்படும். திட்டஞ்சார்ந்த பாதிப்புக்குள்ளாகும் நில வரைவு, இழப்பு அளவு மற்றும் சொத்து மதிப்பீடு உள்ளிட்ட நுண்ணிய வரைவு மற்றும் பாதிக்கப்பட்ட நபர்களின் பட்டியல் ஆகியன தயாரிக்கப்பட்டு அதற்கேற்ப அரசின் நிதி பட்டியலில் ஒதுக்கப்பும் நிதி திருத்தப்படும்.

**ஐ. குறைத்தீர்த்தலுக்கான செயல்முறை(GRIEVANCE REDRESSAL MECHANISM).**

குறை தீர்க்கும் செயல்முறை (GRM) இரண்டு நிலைகளில் நிறுவப்படும். ஒன்று கள நிலையிலும்( PIU ) மற்றும் அடுத்து மேலாண்மை மட்டத்தில் (PMU ) ஏற்படுத்தப்படும். நிர்வாக பொறியாளர் / LA / SDO அரசு சார்பற்ற நிறுவனத்தின் உதவியுடன் அந்த இடத்தில் புகாரைப் பெற்று பதிவு செய்வார். புகார் மதிப்பாய்வு செய்யப்பட்டு PIU மற்றும் தன்னார்வ தொண்டு ஊழியர்கள் இணைந்து, புகார்தாரருடன் கலந்தாலோசித்து தளத்தில் பிரச்சினையை தீர்க்க முயற்சிப்பார்கள். புகார் கிடைத்த 7 நாட்களுக்குள் இது செய்யப்படும். கள நிலையில் 7 நாட்களுக்குள் தீர்க்க முடியாத அனைத்து குறைகளும் குறை தீர்க்கும் குழுவின்(GRC ) கவனத்திற்கு கொண்டு வரப்படும். இக்குழு PIU நிர்வாக பொறியாளர் மற்றும் அரசு சார்பற்ற அமைப்புடனும் கலந்தாலோசித்து புகார் / குறைகளைப் பெற்ற 4 வாரங்களுக்குள் தீர்வு காணும். குறை தீர்க்கும் செயல்முறை(GRM ) தவிர, புகார்தாரருக்கு நாட்டின் சட்ட அமைப்பு நாடி நிவாரணம் பெற எந்நிலையிலும் அனுமதியுண்டு.

## ஓ. கண்காணித்தல் மற்றும் புகாரளித்தல்

திட்ட அமலாக்க பிரிவானது(PIU ) திட்டச்செயல்பாட்டின் உடன் நிகழ்வாக தன்னார்வ தொண்டு நிறுவனம் மூலம் மீள்குடியேற்ற வரைவின்(RESETTLEMENT PLAN ) அமலாக்கத்தையும் கண்காணித்து கூடுதலாக பொது ஆலோசகரின் உதவியோடு அமலாக்கத்தின் மூலக்கூறு மற்றும் நிதி சார்ந்த குறிகாட்டிகளுடன் கூடிய மாதாந்திர மற்றும் காலாண்டு முன்னேற்ற அறிக்கைகளை(PROGRESS REPORTS) சமர்ப்பிக்கும். இதனோடுச் சேர்ந்து கண்காணிப்புச் செயலின் ஊடாக திட்டஞ்சார்ந்த பாதிக்கப்பட்டோரின் ( PAPs) தகவல் தொடர்பு மற்றும் எதிர்வினைகள், கிடைக்கும் நன்மைகள் மற்றும் விருப்பத்தெரிவுகள் , குறை தீர்க்கும் முறைகளின் பயன்பாடு, அவர்களுக்கு தேவையான தகவல் பரப்புதல் மற்றும் திட்ட செயல்படுத்தல் அட்டவணை ஆகியனவும் ஆராயப்படும். மீள்குடியேற்ற வரைவின்(RESETTLEMENT PLAN ). செயல்படுத்தல் ஒரு அனுபவமிக்க வெளிப்புற நிபுணர் / நிறுவனத்தால் கண்காணிக்கப்படும். அவர்கள் சமூகத் தொடர்பான செயல்படுத்தல் பிரச்சினைகளை ஆராய்ந்து தேவையான திருத்த நடவடிக்கைகளுடன், குறித்த கால மதிப்பீட்டு அறிக்கைகளை( PERIODIC REPORTS ) சமர்ப்பிப்பார்கள். மேலும் அவற்றை செயல்படுத்த நேர வரையறைக்கு உட்பட்ட செயல் திட்டத்தினையும் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு(CMRL ) அளிப்பார்கள்.